தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 18.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 7664/E/2018**

திரு G.கோபால் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்போரூர்,
காஞ்சிபுரம் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 11.01.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 12.09.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 15.10.2018 |

******

**ஆணை**

இன்று (18.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு G.கோபால் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு ஏ.கோபி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்போரூர், காஞ்சிபுரம் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 11.01.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கொளத்தூர் பட்டா எண்.27, புல எண்.398/32,

398/38A மேல்முறையீட்டாளர் நிலத்தை UDR அளவு செய்தபோது, தவறுதலாக கோவிந்தராஜ் நாயக்கர் மகன் ஆதிகேசவன் என பதிவு செய்ததாகவும், அது சம்பந்தமாக 30.05.1994 அன்று வட்டாட்சியர், செங்கல்பட்டு அவர்கள் தக்க விசாரணையின் பேரில் கோவிந்த நாயக்கர் மகன் கோபால் என்று திருத்தம் செய்துவிட்டதாகவும், அவ்வாறு திருத்தம் செய்ததை 24.01.2005 மற்றும் 17.01.2006 அன்று வட்டாட்சியர், செங்கல்பட்டு அவர்கள் கணினி பட்டா மற்றும் சிட்டா வழங்கியுள்ளதாகவும், மேலும் கணினி பட்டாவின்படி கிராம நிர்வாக அதிகாரி, கொளத்தூர் அவர்களும் கோவிந்தராஜ் நாயக்கர் மகன் கோபால் என்றும் வாய்தா ரசீதும் வழங்கியுள்ளதாகவும், இவ்வாறு வழங்கிய கணினி பட்டா தற்போது கோவிந்தராஜ் நாயக்கர் மகன் ஆதிகேசவன் என்ற தவறுதலாக பெயர் மாற்றம் 19.02.2007 பிறகு ஏற்பட்டுள்ளது என்றும், இந்த தவறான பெயர் மாற்றம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டுள்ளது என்றும், மீண்டும் இந்த தவறான பெயர் மாற்றத்திற்குண்டான ஆவணத்தின் நகலைத் தகவலாகக் கோரி பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்போரூர், காஞ்சிபுரம் மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 12.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்போரூர் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 15.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (18.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 05.12.2018 மற்றும் 14.09.2019 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். மேலும், பட்டா பெயர் மாற்றம் திருத்தம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் தான் செய்யப்பட வேண்டுமென்றும், மேல்முறையீட்டாளரின் கோரிக்கை தொடர்பாக, வருவாய் கோட்டாட்சியர், செங்கல்பட்டு அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு 18.01.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

6. பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்த ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்று ஆணையம் தீர்மானிக்கிறது. விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளர் 11.01.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவல் தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் அவர்களுக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள அறிக்கையினைப் பரிசீலனை செய்து அதுகுறித்த விபரங்களடங்கிய தகவலினை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 45 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 7664/E/2018</u>**

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்போரூர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

<u>மனுதாரர்</u>

திரு G.கோபால்,
எண்.4, காஞ்சிபுர முனுசாமி தெரு,
சூளை, சென்னை - 112.

Copy to: Judgement File.
*"VP / PA -25.09.19"*